# வெற்றியை பரிசளிக்கும் வலிமையான குடும்பங்கள்..!

# (Strong Families)

பெட்டி ஸ்மித் 'A Tree Grows in Brooklyn' என்ற தனது படைப்பில், ஒரு அற்புதமான கதையைக் கூறுகிறார். கடந்த 1900ம் ஆண்டுகளின் துவக்கத்தில், நியூயார்க் நகரின் புரூக்ளின் பகுதியில் வாழ்ந்த ஏழைச் சிறுமியான ஃபிரான்சி நோலன் என்பவரின் வாழ்வைப் பற்றியது இக்கதை. அந்தச் சிறுமி, ஏழை மக்கள் வாழ்ந்த ஒரு இடுக்கலான குடியிருப்பு பகுதியில், ஒரு சிறிய மற்றும் போதுமான வசதிகளற்ற வீட்டில் தன் குடும்பத்துடன் வசித்து வந்தாள்.

ஒரு நாளைக்கு மூன்றுவேளை உணவு என்பதுகூட, அச்சிறுமியின் குடும்பத்திற்கு போராட்டமான ஒன்றுதான். ஏனெனில், அவளுடைய அப்பா, தனது சம்பளப் பணத்தை அன்றாடம் குடித்தே அழித்துவிடுவார்.

குடும்பத் தலைவரே இப்படி இருக்கக்கூடிய இத்தகையதொரு மோசமான சூழலின் மத்தியில், அந்தச் சிறுமியின் பள்ளி வாழ்க்கை எப்படி இருந்திருக்கும் என்பதை நாமே யூகிக்கலாம். இப்படியான போராட்டங்கள் மற்றும் புறக்கணிப்புகளுக்கு மத்தியில் அவளால் எப்படி பள்ளிக்குச் சென்றிருக்க முடியும்?

அந்தச் சிறுமியின் குடும்பத்திற்கான முக்கிய சொத்துக்களாக 2 புத்தகங்கள் இருந்தன. ஒன்று 'பைபிள்'. மற்றொன்று, ஆங்கில இலக்கிய வித்தகர் ஷேக்ஸ்பியரின் 'The Complete Works of Shakespeare' என்ற புத்தகம். நோலன் சிறுமியாக இருந்த பல ஆண்டுகளுக்கு, அவளின் தயார் மூலமாக, அவளுக்கு ஒரு தாக்கம் வாய்ந்த அனுபவம் தொடர்ச்சியாக கிடைத்து வந்தது.

அந்த 2 புத்தகங்களில், ஏதேனும் ஒன்றை மாறி மாறி, ஒவ்வொரு இரவிலும், நோலனின் தயார் சத்தமாக வாசிப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார். அவர்களின் அன்றைய அந்த திக்கற்ற வாழ்விற்கு, அந்தப் புத்தகங்களின் வாசிப்புதான் பெரும் நம்பிக்கைத் தருவதாக இருந்தது.

அவர்களின் வாழ்வில் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றமும் முன்னேற்றமும் ஏற்படத் தொடங்கின. அதற்கு பிரதான காரணம், அந்தக் குடும்பத்தின் முக்கிய

உறுப்பினர்களிடையே கட்டமைக்கப்பட்டு வலுப்படுத்தப்பட்டிருந்த மன ஆற்றல்தான்.

சக்திமிகு மதிப்பீடுகளைக் கொண்ட வலுவான குடும்பங்களில் சில, சிறுமி நோலன் குடும்பத்தைப் போன்று தொடக்கத்தில் திக்கற்றதாயும் உருகுலைந்ததாயும் பிறரின் பார்வைக்குத் தெரிந்தாலும், அந்த வலுவான மதிப்பீடுகள் அக்குடும்பத்தினுடைய குழந்தைகளின் வாழ்வில் ஒரு நிலைத்தன்மையை உருவாக்குகின்றன. இந்த நிலைத்தன்மையின் வாயிலாக, அக்குடும்பத்தினுடைய குழந்தைகளின் வாழ்வில் முன்னேற்றம் உண்டாகி, அவர்கள் தங்களின் சொந்த சக்தியின் மூலமாக மேலேறி விடுகிறார்கள்.

**புரூக்ளின் பகுதியில் வாழ்ந்த நோலன் குடும்பத்தில் நிலவிய உயர்ந்த மதிப்பீடுகள் யாவை?**

தங்களுடைய வாழ்வை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற மனஉறுதி அந்தக் குடும்பத்தினுடைய ஒரு முக்கிய பலமாக இருந்தது. ஒரு தூதுப் பயணத்தை நடத்தியபோது, நமது கதையின் நாயகி நோலன், ஒரு சுத்தமான மற்றும் மகிழ்ச்சியான பள்ளியைக் கண்டடைந்தாள் மற்றும் தான் பள்ளிக்குச் செல்வதற்காக, எதையெல்லாம் செய்ய வேண்டுமோ அதை எப்படியேனும் செய்துவிட வேண்டுமென தீர்மானித்தாள்.

ஆனால், இந்த முடிவில், ஏமாற்றம் மற்றும் பல கஷ்டங்கள் இருந்தாலும், நோலன் சோர்ந்துவிடவில்லை. அவளது கவனமெல்லாம், தன் குடும்பத்தினுடைய வாழ்வை மேம்படுத்துவது என்பதிலேயே இருந்தது.

நோலன் குடும்பத்தினர் வைத்திருந்த அந்த 2 புத்தகங்களும் அறிமுகப் பாடப்புத்தகங்கள் இல்லையென்றாலும்கூட, நோலனின் தாயார், அந்தப் புத்தகங்களை ஒரு சிறந்த வள ஆதாரமாக கையாண்டார். பள்ளிக்குப் போக முடியாத தன்னுடைய குழந்தைகளை படிப்பறிவுள்ளவர்களாக மாற்றவும், அக்குழந்தைகள் மொழியின் அழகை ரசிப்பதற்குமான கருவியாகவும் அப்புத்தகங்கள் கையாளப்பட்டன.

தன்னால் இயன்ற வகையில், சில சின்ன சின்ன வேலைகளை செய்து, தன் குடும்பத்திற்கு ஒரு சிறிய வருமானம் ஈட்டித் தருவது முதற்கொண்டு, பலவகைகளில், நோலன் ஒரு வளமுள்ள மனுஷியாக தன்னை வெளிப்படுத்தினாள். கிடைக்கும்

இடங்களிலெல்லாம் அமர்ந்து புத்தகம் படிப்பதை நோலன் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டாள். அதன் சுவையை அவள் அற்புதமாக உணர்ந்தாள்.

உங்கள் வாழ்க்கையில் கலந்திருக்கும் நேர்மறை அம்சங்களை அடையாளம் கண்டு அவற்றை பயன்படுத்தும் திறன் பெற்றிருந்தால், அந்தத் திறனே உங்களுடைய வெற்றிக்கான திறவுகோலை உருவாக்கும்.

**ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக ஆகட்டும், 100 ஆண்டுகளுக்கு முன்னதாக ஆகட்டும் அல்லது இன்றைய நிகழ்காலமாக இருக்கட்டும், நமது குடும்பங்களில், நமக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரம் மற்றும் வாய்ப்புகளிலிருந்து நமக்கானதை ஏற்படுத்திக்கொள்ள கற்றுக்கொள்கிறோம்.**

நமது குடும்பங்களிலிருந்தே நாம் துணிவை கற்கிறோம். நாம் தன்னம்பிக்கை உடையவர்களாய் மாறுவதற்கு கற்றுக்கொள்வதோடு, பிறருக்கு உதவிசெய்யும் வகையில் நம்மிடையே பொதிந்துள்ள தனித்த ஆற்றல்களை மேம்படுத்தவும் அறிந்து கொள்கிறோம்.

நமது குடும்பச் சூழலிலேயே சுய-ஒழுங்கும், நிதானமும் பழக்கப்படுத்தப்படுகிறது. விசுவாசம் மற்றும் சார்புத்தன்மை போன்றவை வளர்த்தெடுக்கப்படுகின்றன. நமது குடும்பத்திலுள்ள தாய்-தந்தை, சகோதர-சகோதரிகள் மற்றும் இதர உறவினர்களின் மீது நாம் வைத்துள்ள அன்பு மற்றும் அவர்களின் மீதான மரியாதை போன்றவை, குடும்பம் என்ற எல்லையைத் தாண்டி, வெளியுலகிலும் நீள்கிறது.

நமது குடும்பத்திற்குள், நாம் இணக்கத்தோடும் அன்போடும் நடந்துகொள்கிறோம். சமூகத்தின் மிகச்சிறிய ஒரு அமைப்பான குடும்பத்திற்குள், நாம் பயிற்சி செய்யும் மேற்கண்ட அம்சங்களில் நிகழ்கின்ற தவறுகளுக்கு, மன்னிப்பு மற்றும் விசாரணை அடிப்படையிலான தீர்ப்புகளையும் பெறுகிறோம். இத்தகைய இந்த அனுபவம், நம் சமூக சிந்தனைகளை வளமாக்கிக்கொள்ள பெரிதும் உதவுகிறது.

நமது குடும்பங்களிலேயே, நமக்கு கிடைக்கும் அனுபவங்களின் வாயிலாகவே, நமது வாழ்க்கைக்கான பழக்க வழக்கங்கள் மற்றும் சமூகம் குறித்த நோக்குகள் ஆகியவை உருவாகின்றன, பண்படுத்தப்படுகின்றன மற்றும் அளவிடப்படுகின்றன. இந்த செயல்பாடு, நம்பிக்கை, மகிழ்ச்சி மற்றும் உடல்நலத்தின் அடிப்படையில் நடைபெறுகின்றன.

அதற்காக, நமது குடும்பங்கள் என்பவை சிறிதும் தவறில்லாத ஒரு நுட்பமான அமைப்பு என்ற அர்த்தமெல்லாம் கிடையாது. ஆனால், மனிதனின் தன்மை மேம்பாடு என்று எடுத்துக்கொண்டால், அதைப் பெறுவதற்கான ஒரு சிறந்த களமாக குடும்பங்கள் திகழ்கின்றன.

குடும்பங்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் சமூக தொடர்புகள் சார்ந்த அடிப்படையான செயல்களுக்கு, இந்த சமூகத்தின் ஆதரவு கட்டாயம் தேவை. சமூகத்தின் அங்கங்களாக திகழும் அண்டை வீட்டார், பள்ளிகள், கல்லூரிகள், வழிபாட்டு இடங்கள், மருத்துவமனைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் ஆகியவற்றின் ஆதரவு இருந்தால்தான் குடும்பத்தினுடைய நடவடிக்கைகள் செம்மையடையும்.

எனவே, நமது குடும்பங்களை சிறப்பானதாக்க, நாம் இணைந்து செயல்படுவோம். வலிமையான குடும்பங்கள், வலிமையான ஆளுமை கொண்ட மனிதர்களை உருவாக்குகின்றன.

இந்த உலகத்திற்கு தேவையானது இதுதானே..!?

***************

*மூல ஆங்கிலக் கட்டுரை: **Maren Schmidt (மாண்டிசோரி ஆய்வாளர்)***

*தமிழ் மொழிபெயர்ப்பு: சொ.பிரசன்ன பாரதி (ரிலீஃப் ஃபவுண்டேஷன், சென்னை)*

*மேலதிக விபரங்களுக்கு: www.relieffoundation.in*